**அகலவத்த பிரதேச சபை – 2022**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அகலவத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் அகலவத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158(அ) பிரிவு | ஆதனவரி அறவிடும் இறுதி படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | ஆதனங்களை தடைசெய்யும் செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் இரண்டாவது காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 23,720,050 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 33,267,541 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 4,377,989 | 4,448,413 | 3,699,567 | 1,586,267 | 3,528,989 | 3,644,535 | 2,766,519 | 882,693 |
| (ii) | வாடகை | 5,995,500 | 5,872,772 | 5,680,964 | 191,808 | 5,433,000 | 5,534,741 | 4,744,176 | 790,564 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 420,000 | 378,792 | 378,792 | - | 420,000 | 462,914 | 462,914 | 4,000 |
| | | ------------ | ------------ | --------- | ----------- | ------------ | ------------ | --------- | ----------- |
| | மொத்தம் | 10,793,489 | 10,699,977 | 9,759,323 | 1,778,075 | 9,381,989 | 9,642,190 | 7,973,609 | 1,677,257 |
| | | ======== | ======= | ======= | ======= | ======== | ======= | ======= | ======= |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,207,500 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 19,495,830 ஆகவும் காணப்பட்டது. | 2021.12.31 இல் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் கிடைத்துள்ளது. நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்படும். | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பசளைத் தளத்தில் நிறுத்திவைக்கப்பட்ட டிப்பர் வண்டியின் பெற்றரி 2022 மார்ச் 08 ஆம் திகதி காணாமல் போயிருந்தது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 103(1)(ஆ) இன் பிரகாரம் பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டி இருந்த போதிலும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலிஸிற்கு அறிக்கை இடுமாறு இயந்திர ஓட்டுநருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது உரிய தொகையை பொறுப்பு வாய்ந்தவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முகாமைத்துவத்தால் பொலிஸில் முறைப்பாடு செய்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான டிப்பர் வண்டி மற்றும் பெக்கோ லோடர் முறையே 2018 மற்றும் 2010 ஆம் ஆண்டுகள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | டிப்பர் வண்டி பிரதேச சபை வேலைகளுக்காக தற்போது ஈடுபடுத்தப்படுகின்றது. சிறிய வீதிகளில் ஓடமுடியாதிருந்தமையால் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் வேறொரு சபைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பெகோ லோடரைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 35,100 கூட்டுத்தொகையான 135 மின்சார துணைப்பாகங்களும், 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 74,100 ஆன 600 வேல்ட் LED பிளஸ்லைட் 06 உம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. | LED Cobra Street Lamp நாட்டில் பயன்படுத்துதல் அதிகரித்ததுடன் களஞ்சியத்தில் காணப்படுகின்ற துணைப்பாகங்களுக்காக தேவையான உதிரிப் பாகங்களைக் கண்டறிவதற்கு முடியாதிருந்தது. உதிரிப் பாகங்களை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக களஞ்சிய இருப்பு முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு | மயான நிலங்களின் பராமரிப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்ட போதும் உரித்து சபைக்குச் சொந்தமாக இல்லை. காணிகளின் எல்லையினை அமைப்பதற்கு கணிசமான | மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக வேலி எல்லையினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலி எல்லை அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான எந்தவொரு மயான நிலத்திற்கும் வேலி எல்லைகள் அமைக்கப் பட்டிருக்கவில்லை. | கிரயமொன்று ஏற்படுகின்றமையினால் உரித்தைப் பெற்ற பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | அகலவத்த பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள 25 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 25 காணிகளும் பிரதேச சபை பிரதேச செயலாளர் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரியதாகும். பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மயான நிலங்களின் உரித்தை பிரதேச சபைக்கு கையேற்றல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மேல் மாகாண பிரதிப் பிரதம செயலாளரின் 2018 பெப்ரவரி 08 ஆம் திகதிய CSO/ENG/2/2/17 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கொரிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் நிர்மாணித்து சபைக்கு கையளிக்கப்பட்ட 4,929 சதுர மீற்றர் அளவுடைய இடர் முகாமைத்துவ நிலையத்தின் இரண்டு மாடிக் கட்டிடம் உடைந்திருந்தமையால் உடைத்து அகற்றி புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்க வேண்டுமென வழங்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் அதற்கு 2020 பெப்ரவரி 11 ஆம் திகதி பொதுச் சபை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கட்டிடம் உடைந்திருந்தமை மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. இதனை அகற்றுவதற்கு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உடைந்த கட்டிடத்தை விரைவாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |